UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கோவேறு கழுதையில் கதை மாந்தர் கட்டமைப்பு

**மு. ரிஸ்வானா பர்வீன்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி

**முனைவர் ந. ஜெயசுதா**
ஆய்வு நெறியாளர் மற்றும் தமிழ் உதவிப் பேராசிரியர்
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய நவீன உலகத்தில் எத்தனையோ பழமைகள் வழக்கொழிந்தாலும் இலக்கிய வடிவில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஆசிரியர்களின் படைப்புகளில் வண்ணார் இனமும், சமூகமும், தொழிலும் இக்கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளது. ஒருவேளை சோற்றுக்கு ஒரு சமூகம் நூற்றாண்டுகளாய் கொத்தடிமைகளாய் தன் சொந்த தாய் நாட்டிலேயே படும் துன்பத்தை இக்கட்டுரை மையப்படுத்தியுள்ளது. ஒருவர் செய்யும் தொழிலின் மூலமே அவனும் அவன் சமூகமும் மதிக்கப்படுகிறார்கள் என்பதே இக்கட்டுரையின் நோக்கம். கதைமாந்தர் கட்டமைப்பு என்பதே கோவேறு கழுதையில் ஆரோக்கியம் என்னும் கதாபாத்திரம் கட்டமைக்கப்பட்டுள்ளது. துணிவெளுக்கும் வண்ணார் என்னும் சமூகம் இக்கதையில் உயிரோட்டமாக சொல்லப்பட்டுள்ளது. ஒரு நாவலுக்கு கதைமாந்தர் என்பது மிக இன்றியமையாதது. கதைக்கருவும் கதை மாந்தரும் ஒரு நூற்றாண்டிலேயே ஆளச்செய்கிறது என்பது இதுபோன்ற புதினங்களே சான்றாக இருக்கின்றன.

**முதன்மைச் சொற்கள்**

ஊழியம், சமூகம், ஊர்ச்சோறு, துணிவெளுத்தல், உணவு, மாற்றம், பெண்மை

**முன்னுரை**

குடும்பத்திற்கு வெளியே ஏற்படுகின்ற மானிட உறவுகளே சமூகத்திற்கு வழி வகுக்கின்றன. சமூக வளர்ச்சி தாய் சேய் நிலையில் தொடங்கி உலக அளவில் விரிந்துள்ளது. பல பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கிய மாந்தர்களே சமூகத்தின் உறுப்பினர்களாக திகழ்கின்றனர். மனிதன் ஒரு சமூக விலங்கு என்று கருதப்படுகின்றான். மனிதன் சமூக குழவில் அன்றி வாழ முடியாது. ஆதலால் தனி மனிதன் சமூகத்துடன் தொடர்பு கொண்டிருப்பது வியப்பிற்குரியது அன்று. “மனிதன் ஒரு குடும்பம், குழு, அரசு போன்றவற்றில் இணைந்தே செயல்படுகிறான். சமுதாயம் தனி மனிதனை சமுதாய உறுப்பினனாக்க பெருமளவிற்கு தொண்டு புரிகின்றது. பொதுவாக சமூக இயல்பு, தனிமனிதனின் இயல்பு ஆகிய இரண்டும் ஒருங்கே வளர்கின்றன” சமூகம் உயிருள்ள ஒன்ற என்பதே முதல் பிரச்சனையாகும். பல தற்கால சமூகவியலாளரும், சமூக உளவியலாளரும் சமூகம் எயிருள்ளதல்ல என்ற விவாதிக்கின்றார்கள். அந்தச் சமூகத்தை உருவாக்கும் தனி மனிதர்களின் உள்ளங்களை விட பெரிதான ஒன்றாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் கூறுகின்றனர்.

கோவேறு கழுதை என்னும் நாவலில் தனியாள் சந்திக்கும் பிரச்சனைகளையும் கதை மாந்தர்களின் தன்மையும் அவர்கள் அச்சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும்

ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**கோவேறு கழுதைகள் நாவலில் தனியாள் சந்திக்கும் பிரச்சனைகள்**

கோவேறு கழுதைகள் நாவலின் தலைமை பாத்திரங்களான ஆரோக்கியம்-சவுரி என்ற தம்பதியினர் வண்ணார் குடியைச் சார்ந்தவர்கள். அவர்கள் வாழும் ஊரில் மற்றவர்களோடு ஏற்படுகின்ற சமூகத் தொடர்புகளைக் காண்போம்.

**ஆரோக்கியமும் சமூகமும்**

ஆரோக்கியம் பறையர் தெருவிற்கு வண்ணார் வேலை செய்பவளாக இருக்கிறாள். அவள் அந்த ஊரின் மீதும், மக்களின் மீதும் மிகுந்த பற்றுடையவளாகக் காணப்படுகிறாள். அச்சமூகம் அவளை வேலைக்கு பயன் படுத்திக் கொள்கிறதே தவிர, அவளுக்கு உரிய மரியாதையும் அங்கீகாரமும் எப்படி வழங்கப்படுகிறது என்பதை விளக்குகின்றது.

**ஆரோக்கியம் செய்யும் வேலைகள்**

**“செய்யும் தொழிலே தெய்வம்**
**அந்தத் திறமை தான் நமது செல்வம்**
**கையும் காலும் தான் உதவி**
**கொண்ட கடமை தான் நமது பதவி"[1]**

எனும் பாட்டிற்கு ஏற்ப ஆரோக்கியத்தின் வேலையும் அமைகிறது. ஆரோக்கியம் எந்த வேலையையும் செய்யத் தயங்குவதில்லை . அவளுக்கு குடி ஊழியம் செய்வதும் அதிலிருந்து பெறக்கூடிய உணவு, தானியம் பெறுவதும் போன்றவையே பிரதானமாகிறது. ஆரோக்கியம் செய்யும் பவேலைகளாவன,

**துணி எடுத்து துவைத்தல்**
**களம் தூற்றுதல்**
**ஊர்ச்சோறு வாங்குதல்**
**பிரசவம் பார்த்தல்**
**தீட்டுத்துணி துவைத்தல்**

முதலிய வேலைகளை எவ்வித வெறுப்புமின்றி செய்வாளாக காணப்படுகிறார்.

**தொழில் வகுப்பு கட்டமைப்பு**

தமிழ்நாட்டில் சுய தேவை பூர்த்தி உடைய கிராம சமூக அமைப்பு நிலவிய போது அதில் குடி ஊழியக்காரர்களாக இருந்த சாதியினரில் வண்ணார் சாதியினர் இடம் பெற்றிருந்தனர். தொழிலும் சாதியும் இறுக்கமாகப் பிணைக்கப்பட்ட பின் தொழில் என்பது பரம்பரை அடிப்படையில் அமைந்து போனது. இவ்வகையில் துணிவெளுத்தல் என்ற தொழில் வண்ணார் என்ற சாதிக் குரியதாக ஆக்கப்பட்டது. சிலவகையான, குறிப்பாக அழுக்கு டன் தொடர்புடைய உடல் உழைப்பை இழிவாக கருதும் சமூக சிந்தனை தமிழ் நாட்டில் வலுப்பெற்ற போது மதிப்பு குறைந்த சாதியினராக வண்ணார்கள் ஆக்கப் பட்டார்கள்.

**வண்ணார்த் தொழிலின் தொன்மை**

சங்க இலக்கியமான கலித்தொகையில் ‘புலத்தி’ என வண்ணார் தொழில் செய்யும் பெண் குறிப்பிடப்படுகிறாள். வண்ணார் உவர்மன் சேகரித்தல் சங்க இலக்கியங் களில் குறிப்பிடப்படுகின்றது.

“வண்ணர்களின் தொழில்முறை மற்றும் வாழ்க்கை குறித்த செய்திகளை கூறா விட்டாலும் வண்ணர்களின் மீது விதிக்கப் பட்ட சில வரிகளை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. “வண்ணார் கானம், வண்ணார பாட்டம், வண்ணார் வரி, வண்ணார் பாறை என்ற பெயர்களில் வழங்கி வந்துள்ளது. வண்ணார பாறை இது வண்ணக்கண், வண்ணான், வண்ணாக்கள் என்ற பெயர்களில் வண்ணாரையும் அவர் தொழிலையும் கல்வெட்டுகள் குறிக்கின்றன ”[2]

**வண்ணாரின் அவல வாழ்க்கை**

குடி ஊழிய முறை சார்ந்தவர்களாக வண்ணார்கள் விளங்கியபோது அவர்களின் அன்றாட உணவுத் தேவையை அவர்களின் பணியை பெரும் கிராம மக்களே பார்த்துக் கொண்டனர். நாள்தோறும் பெரும்பாலும் மாலையில் வீடு வீடாக சென்று சோரும் குழம்பும் பெற்றுக் கொள்வர் இது ஊர்ச் சோறு எடுத்தல் எனப்படும். சில கிராமங் களில் ஒரு பகுதியில் காலையிலும் ஒரு பகுதியில் மாலையிலும் ஊர் சோறு எடுக்கும் பழக்கம் உண்டு. பல வகையான குழம்புகள் ஒன்று சேர்வதை தவிர்க்கும் முறையாக சிலர் குழம்பு வாங்காது சோறு மட்டும் வாங்கிக் கொள்வர். தேவைக்கு மேல் சேரும் சோற்றையும் தங்களுக்கு வழங்கப்பட்ட கெட்டுப்போன சோற்றையும் வளர்ப்பு பிராணிகளான கழுதை, நாய், ஆடு போன்றவற்றிற்கு வைத்து விடுவர்.

“இவ்வாறு சோறு எடுக்க செல்லும்போது வீட்டுக்கார பெண் சாப்பிட்டுக் கொண்டிருந் தால் கையை கழுவாது எச்சில் கையாலேயே சோறு எடுத்து போடுவதுண்டு. சிலர் குழந்தைகள் மீதம் வைத்த உணவையும் கலந்து போட்டு விடுவர். சில வீடுகளில் வந்துட்டா வேலையத்து இவளுக்கு சமைச்சு போடுதல் வெட்டி தண்டம் என்பர். இன்றும்

கூட ஆங்காங்கே ஊர் சோறு எடுக்கும் அவலம் நின்ற பாடில்லை இதற்கு எதிராக இம்மக்களிடமிருந்து எதிர்க்குறள் ஒளிக்கத் துவங்கி உள்ளது."[3]

**துணியெடுத்து துவைத்தல்**

ஆரோக்கியம் சவுரி இருவரும் பறையர் தெருவில் வீடு வீடாகச் சென்று அழுக்குத் துணிகளை வாங்கி வந்து தொரப்பாட்டு நீர்த்துரைக்கு கொண்டுபோய் துவைத்து கொடுப்பார்கள். உடல்நிலை சரியில்லை என்றாலோ, வேறு ஊருக்குச் சென்று வந்தாலோ இரண்டு நாள் துணி எடுக்க வில்லை என்றால் தெருவில் புகார் கூறவும், வாய் நிறைய திட்டியும், சிலர் சண்டை பிடிக்கவும் செய்வார்கள்.அவ்வூர்மக்கள்,

"ரெண்டு நாளாத் துணியும் எடுக்கல. முந்தா நாளு எடுத்துகிட்டு போன துணியும் வரல. மாத்துறதுக்கு அவனவன் இடுப்புல துணி இல்லாம நிக்கறான்."

**"வரவர வண்ணான் போக்கே சரியில்ல. மோசம்,"**

**"இவன மாத்திட்டா தேவலாம்,"**

**..... வண்ணான் வண்ணானாவா இருக்கானிப்போ"[4]**

என்றவாறு பேசும்பொழுதெல்லாம், ஆரோக் கியம் அமைதியாக இருந்து விடுவாள். அவர்களின் உடையில் உள்ள அழுக்கு களை மட்டுமே அவளால் நீக்க முடியும். உள்ளத்தில் உள்ள அழுக்குகளை நீக்க முடியாதவர்களாக அம்மக்கள் உள்ளனர்.

**களம் தூற்றுதல்**

களம் தூற்றுவது என்பது அறுவடைக் காலங்களில் அறுவடை செய்த தானியத்தில் உள்ள தூசுகளை காற்றின் வேகத்தை அறிந்து, ஒரே இடத்தில் நின்று தூற்ற வேண்டும். காற்று வேகமாக அடித்தாலும், தானியங்கள் சிதறிப் போனாலும் இவர்களை நிலக்காரர்கள் பேசுவார்கள். களம் தூற்ற வேண்டி எல்லோரும் சண்டைக்கு வரும்போது ஆரோக்கியம் தான் எல்லோரையும் இழுத்து பிடித்து சமாதானம் செய்வாள். களம் தூற்றும் நாட்களில்,

"ஆரோக்கியத்திற்குத் தலையே தெறித்து விடும் போல் இருந்தது. ஒன்னுக்கு ரெண்டுக்கு போகக்கூட அவளுக்கு நேரம் கிடைப்பது அரிதாகத்தான் இருந்தது. சதா நேரமும் வேலை, ஒரே வேலை. ஒவ்வொரு வீட்டுத் தானியத்தையும் தூற்றியாக வேண்டும். ஆரோக்கியத்திற்கு இதுதான் வருமானத்திற்கான நேரம். இதை வைத்துக் கொண்டுதான் அடுத்த அறுவடைக் காலம் வரை அவள் குடும்பம் நடத்த வேண்டும். காலணியில் இருநூறு வீடுகளுக்கு குறையா திருக்கும். எல்லா வீடுகளுக்குமே ஆரோக்கி யமும் சவுரியும் தான். தூக்கமே இல்லாமல் ஆரோக்கியம் ஒவ்வொரு வீட்டுக்கும் அலைந்துகொண்டிருந்தாள்"[5]

இதில் அவள் குடும்பத்திற்கு போதிய அளவுக்கு தானியங்கள் கிடைத்தது. பின்னர் கால மாற்றத்துக்கு ஏற்ப, அவர்களுக்கு வேலையும் குறைந்து தானியமும் குறைக்கப்பட்டு வறுமைச் சூழலை அடைகின்றனர்.

**முடிவுரை**

தனி மனிதன் பிற மக்களைச் சார்ந்தே வாழ வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. சமூக உளவியல் தனி மனிதனுடைய நடத்தையை அவனுடைய சூழ்நிலைகளில் ஓர் ஒழுங்கு முறையினை ஆராய்கின்றது. தனியனுக்கும் சமூகத்திற்கும் இடையில் ஏற்படும் செயல் பாட்டின் தாக்கமே இடைவினை ஆகும். வண்ணான் தொழிலினை மேற்கொள்கின்ற ஆரோக்கியம், சவுரி தம்பதியினர் வாழ்வில் நிகழக்கூடிய அவல நிலைகளை ஆசிரியர் எதார்த்தமான முறையில் எடுத்துரைத்து ள்ளார்.

**சான்றெண் விளக்கம்**

1. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள், ப. 36.
2. ஆ. சிவசுப்பிரமணியன், தமிழக வண்ணார் வரலாறு வழக்காறுகளும், ப. 2.
3. மேலது., ப. 10.
4. இமையம், கோவேறு கழுதைகள், ப. 53.
5. மேலது., ப. 33.

**துணைநின்ற நூல்கள்**

1. இமையம், கோவேறு கழுதைகள், க்ரியா, சென்னை, மறுபதிப்பு-2019
2. சிவசுப்பிரமணியன்.ஆ., தமிழக வண்ணார் வரலாறும் வழக்காறுகளும், பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட், 16(142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை, இரண்டாம் பதிப்பு-2019
3. பாரதியார், பாரதியார் கவிதைகள், அருணா வெளியீடு, மூன்றாம் பதிப்பு-2011